# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, உள்ளூராட்சி கடன் வழங்கு சபைகள் சட்டம்

---

*[1983, செத்தெம்பர் மாதம் 07 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1983, செத்தெம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : சதம் 55.** **தபாற் செலவு : சதம் 50.**

## 1983 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் சட்டம்

[1983, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 20/81
———
14 82

உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர்களுக்குக் கடன்வழங்கும் நோக்கத்திற்காகவும், அவ்வுறுப்பினர்கள், செட்டாகவும் அவர்களது வருவாய்க்குள்ளும் வாழ அவர்களுக்கு அறிவு புகட்டித் துணைபுரியும் நோக்கத்துக்காகவும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் பழக்கத்தையும், சேமிக்கும் பழக்கத்தையும் அவற்றின் உறுப்பினர்களிடையே மேம்படுத்தும் நோக்கத்துக்காகவும் உள்ளூர் அதிகாரசபை ஊழியர்களுக்காக கடன்வழங்கு சபைகளைத் தாபிப்பதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் இணைக்களமும் உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் பணிப்பாளரும்.**

2. (1) (இதனகத்துப்பின்னர் "இணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் இணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் பணிப்பாளரொருவரும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் பிரதிப் பணிப்பாளர்களும், உதவிப் பணிப்பாளர்களும், அத்தகைய வேறு அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

**உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகளும் அவற்றின் உறுப்பினர்களும்.**

3. (1) ஒவ்வோர் உள்ளூர் அதிகாரசபைக்கும் (இதனகத்துப்பின்னர் "கடன் வழங்கு சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஓர் அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் தாபிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், பணிப்பாளர், அவசியமானதும் தோதானதுமென அவர் கருதுகின்றவிடத்து, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கென கடன் வழங்கு சபை ஒன்றைத் தாபிப்பதற்கு அதிகாரம் அளிக்கலாம்.

(2) ஓய்வூதியத்துக்குரித்துடைய அல்லது சகாய நிதியமொன்றுக்கு உதவுதொகை செலுத்துகின்ற உள்ளூர் அதிகாரசபையிலுள்ள ஊழியர் ஒவ்வொருவரும் அவ்வுள்ளூர் அதிகாரசபைக்கெனத் தாபிக்கப்பட்ட கடன்வழங்கு சபையொன்றில் உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்.

**கடன்வழங்கு சபைகளைக் குலைத்தல்.**

4. மூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைக்கென அல்லது எவையேனும் உள்ளூர் அதிகார சபைகளுக்கென கடன் வழங்கு சபையொன்று அல்லது கடன் வழங்கு சபைகள் தாபிக்கப்பட்டதன்பின்னர், அவ்வாறு தாபிக்கப்பட்ட கடன்

2 —சீ 71193—4,375 (83/06)

வழங்கு சபை அல்லது சபைகள் வேறுபடுத்தப்படுவது அவசியமானதும் தோதானதுமெனப் பணிப்பாளர் காணுகின்றவிடத்து, அவர் அமைச்சரின் அங்கீகாரத்துடன் அத்தகைய கடன்வழங்கு சபையை அல்லது கடன் வழங்கு சபைகளைக் கலைக்கலாம் என்பதுடன், அதற்குப் பதிலாக அல்லது அவற்றிற்குப் பதிலாக 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின் படி, விடயத்திற்கேற்ப புதிய கடன்வழங்கு சபையொன்றை அல்லது புதிய கடன்வழங்கு சபைகளைத் தாபிக்கலாம்.

முகாமைக்குழு.

5. (1) பணிப்பாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தவிசாளரொருவரையும் செயலாளரையும், ஒவ்வோர் ஐம்பது உறுப்பினர்களுக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் என்ற அடிப்படையில், தெரிவுசெய்யப்படுவோரையும் கொண்டுள்ள முகாமைக்குழுவொன்றினால் கடன் வழங்கு சபையொன்றின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும்; ஆயின் எவ்வாறாயினும் தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை இருபத்தொன்றிற்கு மேற் படாதிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், கடன் வழங்கு சபையின் உறுப்பினர்களில் குறித்த ஏதேனும் தொகுதியினர் அல்லது குறித்த ஏதேனும் வகுப்பினர் முகாமைக் குழுவில் பிரதிநிதித்துவம் பெறவில்லை என்று பணிப்பாளர் திருப்தியடைந்தால், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, அவர் மூன்றுக்கு மேற்படாத பிரதிநிதிகளை முகாமைக் குழுவுக்குப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(2) கடன்வழங்கு சபையொன்றின் முகாமைக்குழு உறுப்பினர்கள் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) கடன்வழங்கு சபையொன்றின் முகாமைக்குழுவினது எவரேனும் உறுப்பினர் அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் துர்முகாமை செய்துள்ளார் அல்லது மோசடி புரிந்துள்ளார் அல்லது கவனவீனமாக நடந்துள்ளார் என்ற காரணங்களுக்காக அந்த எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவது உசிதமானதென அமைச்சர் கருதுவாரெனில் அவர் அவ்வாறு அகற்றலாம். அத்தகைய அகற்றுதல் எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படலாகாது.

(4) (அ) கடன்வழங்கு சபையொன்றின் முகாமைக்குழு அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் துர்முகாமை செய்துள்ளது, மோசடி புரிந்துள்ளது அல்லது கவனவீனமாக நடந்துள்ளது என்ற காரணங்களுக்காக அல்லது அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிர்வாக நோக்கங்களுக்காக அத்தகைய முகாமைக்குழுவைக் கலைத்தல் உசிதமானதென அமைச்சர் கருதினால், அவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அதில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய குழுவைக் கலைக்கலாம். அமைச்சரினால் ஆக்கப்படும் அத்தகைய கட்டளையெதுவும் எந்நீதிமன்றத்திலும் கேள்விக்கு உட்படுத்தப்படலாகாது.

(ஆ) ஏதேனும் கட்டளை (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்படுகின்றவிடத்து பணிப்பாளர், புதிய முகாமைக்குழு ஒன்றுக்கான தேர்தல் எக்காலப்பகுதியினுள் நடைபெறவேண்டுமென்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

(5) முகாமைக் குழுவொன்றின் பதவிக்காலத்தின்போது ஏற்படும் ஏதேனும் வெற்றிடம் பணிப்பாளரினால் செய்யப்படும் பெயர் குறித்த நியமனம் மூலம் நிரப்பப்படலாம். அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, அத்தகைய குழுவினது உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் அரைவாசியை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது. அத்தகைய குழுவிற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அத்தகைய குழுவின் பதவிக்காலத்தின் முடிவுறுதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

உப குழுக்களை நியமித்தல்.

6. கடன்வழங்கு சபையொன்றின் முகாமைக்குழு, கடன் வழங்கு சபையின் குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய உப குழுக்களை நியமிக்கலாம்.

இடைக்கால முகாமைக்குழு.

7. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் கடன்வழங்கு சபையொன்றின் முகாமைக் குழுவொன்று கலைக்கப்பட்டிருக்கின்றவிடத்து அல்லது கடன்வழங்கு சபை தொடர்பாக முகாமைக்குழுவெதுவும் இல்லாதிருக்கின்றவிடத்து, பணிப்பாளர், 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் புதிய முகாமைக் குழுவொன்றின் உறுப்பினர்கள் நியமிக்கப்படும்வரையும், பெயர்குறித்து நியமிக்கப்படும்வரையும், முகாமைக்குழுவினது அலுவல்களை நிருவகிக்கும் நோக்கத்திற்காக ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால முகாமைக்குழுவொன்றைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களுள்ளிருந்து அத்தகைய ஒவ்வோர் இடைக்கால முகாமைக்குழுவின் தவிசாளரையும் செயலாளரையும் நியமித்தல் வேண்டும்.

மதியுரைக்குழு.

8. திணைக்களம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யும் நோக்கத்திற்கென கடன்வழங்கு சபைகளின் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒன்பது ஆட்களுக்கு மேற்படாதோரைக் கொண்டுள்ள மதியுரைக் குழுவொன்றை அமைச்சர் அமைக்கலாம். அத்தகைய குழுவில் ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களாவது பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் உறுப்பினராகவிருத்தல் வேண்டும்.

கடன்வழங்கு சபைகளின் பணிகள்.

9. கடன்வழங்கு சபைகளின் பணிகள் —

(அ) உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதலும் ;

(ஆ) வழங்கப்படும் கடன்கள், உறுப்பினர்களின் உண்மையானவையும் நன்நோக்குடையவையுமான தேவைகளுக்கு மட்டுப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துதலும்;

(இ) வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுவதனை உறுதிப்படுத்துதலும் ;

(ஈ) உறுப்பினர்கள் செட்டாகவும், அவர்களின் வருவாய்க்குள்ளும் வாழ அறிவு புகட்டுதலும், துணைபுரிதலும் ;

(உ) சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் பழக்கத்தையும் சேமிக்கும் பழக்கத்தையும் உறுப்பினர்களிடையே மேம்படுத்துதலும் ;

(ஊ) கடன்வழங்கு சபைகளுடனும் அவற்றின் பணிகளுடனும் தொடர்புபட்டனவும், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியனவுமான அத்தகைய கொள்கைகளையும் திட்டங்களையும் செயற்படுத்துவதற்குத் துணைபுரிதலும் ; அத்துடன்

(எ) கடன்பட்ட உறுப்பினர்களின் மறுசீரமைப்பில் துணைபுரிதலும்,

என்பனவாதல் வேண்டும்.

உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் நிதியம்.

10. (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) "உள்ளூராட்சி கடன்வழங்கு சபைகள் நிதியம்" என அழைக்கப்படும் நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்நிதியத்திற்கு பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும் :—

(அ) கடன்வழங்கு சபைகளின் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் மாதாந்த உதவுதொகைகளும் ஏனைய அறவீடுகளும் ;

(ஆ) கடன்வழங்கு சபைகளின் தொழிற்பாட்டிற்கென திரட்டு நிதியத்திலிருந்து வாக்களிக்கப்படக்கூடிய பணங்கள் யாவும் ;

(இ) கடன்வழங்கு சபைகளினால் சம்பாதிக்கப்படும் இலாபங்கள், வட்டி, பங்கிலாபங்கள் என்பன யாவும் ; அத்துடன்

(ஈ) நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்படும் எவையேனும் வேறு பணங்கள்.

(3) இந்நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ;

(ஆ) உறுப்பினர்களின் உதவுதொகைகளின் மீளளிப்புகள் ;

(இ) திரட்டிய நிதியத்துக்கான மீளளிப்புகள் ;

(ஈ) திரட்டு நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன்கள், முற்பணங்கள் என்பன மீதான வட்டி ;

(உ) காப்புறுதி நிதியத்துக்குச் செலுத்தப்படவேண்டிய ஏதேனும் பணத்தொகை ; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்கென அவசியமானவையெனப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்ட எவையேனும் பிற கொடுப்பனவுகள்.

(4) நிதியத்திலிருக்கும் ஏதேனும் மேன்மிகைப் பணம், அமைச்சர் அங்கீகரிக்கக்கூடிய அத்தகைய முறையில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

11. கடன்வழங்கு சபைகளின் தொழிற்பாட்டிற்கெனத் திரட்டு நிதியத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட எவையேனும் பணங்கள், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படு கின்றவாறு திரட்டு நிதியத்துக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும். திரட்டு நிதியத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட பணங்களைத் திருப்பிக்கொடுத்தல்.

12. (1) கடன்வழங்கு சபையொன்றின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரது மாதாந்த திரட்டிய சம்பளத்தின் ஒரு சதவீதத்தை, மாதாந்த உதவு தொகையாகச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும். உறுப்பாண்மைக்கான உதவு தொகைகள்.

(2) அத்தகைய உதவுதொகைகளும் அவற்றின் மீதான பங்கிலாபங்கள் எவையேனுமிருப்பின் அவையும், அத்தகைய உறுப்பினரின் தொழில் இல்லாதொழியும்போது அத்தகைய உறுப்பினருக்கு அல்லது எழுத்து மூலம் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அவரின் நியமத்தருக்கு அல்லது நியமத்தரொருவர் இல்லாத போது அவரது சட்டப்படியான பிரதிநிதிக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

13. கடன்வழங்கு சபைத் திணைக்களமானது அறவிட முடியாத கடன்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய இழப்புக்களைச் சரிசெய்வதற்காக காப்புறுதி நிதியமொன்றைப் பேணிவருதலும் தொழிற்படுத்தலும் வேண்டும். காப்புறுதி நிதியம்.

14. (1) திணைக்களத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். நிதியத்தின் கணக்குகள்.

(2) திணைக்களமானது நிதியத்தின் வரவு செலவின் முறையான கணக்குப் புத்தகங்களை ஒழுங்காக வைப்பித்தல் வேண்டும்.

15. (1) விதித்துரைக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் அல்லது அவற்றில் எவையேனும் கருமங்கள் தொடர்பாக அல்லது எக் கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப் பட்டுள்ளதோ அந்தக் கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) குறிப்பாகவும், (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் : —

(அ) முகாமைக்குழுவொன்றின் அல்லது இடைக்கால முகாமைக் குழுவொன்றின் கூட்டங்களுக்குத் தேவைப்படும் கூட்ட நடப்பெண் உட்பட, கூட்டங்களை நடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும் ;

(ஆ) முகாமைக் குழுவொன்றுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும் ;

(இ) கடன்வழங்கு சபையுறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குதலுடனும் அத்தகைய கடன்களை அறவிடுதலுடனும் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும் ;

(ஈ) நிதியத்தின் கணக்குகளை நிருவகித்தலும் பேணுதலும் ;

(உ) திரட்டு நிதியத்திலிருந்து வாக்களிக்கப்படக்கூடிய பணங்களை மீளக்கொடுத்தலும் ;

(ஊ) உறுப்பாண்மைக்கான உதவுதொகைகளை அறவிடுதலும் அவற்றை மீளக்கொடுத்தலும் ;

(எ) உறுப்பாண்மைக்கான உதவுதொகைகளின் மீதான பங்கிலாபங்களை வெளிப்படுத்துதல் ;

(ஏ) காப்புறுதி நிதியத்தை நிருவகித்தல் ; அத்துடன்

(ஐ) மதியுரைக் குழுவின் தவிசாளரை நியமித்தலும் அதன் கூட்டங்களிலான நடவடிக்கைமுறையும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர், வசதியாகக் கூடியவிரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதியெதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று நீக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

16. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, “உள்ளூரதிகாரசபை ஊழியர்” என்பது உள்ளூராட்சிச் சேவை உறுப்பினரொருவர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அலுவலரொருவர் அல்லது சேவையாளர் ஒருவர், அத்துடன் 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அபிவிருத்திச் சபையொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு, 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.